# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1512/விசாரணை/E/2024**

திரு.K.பாண்டி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/சார் ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்,
சார் ஆட்சியர் அலுவலகம், உசிலம்பட்டி, மதுரை – 625 020. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 10.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், உசிலம்பட்டி தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக வட்டத் துணை ஆய்வாளர் திரு.நாகேந்திரன் 15.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, உசிலம்பட்டி வட்டாசியர்/மேல்முறையீட்டு அலுவலரின் 13.05.2026 தேதியிட்ட அறிக்கையை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. உசிலம்பட்டி வட்டாசியர்/மேல்முறையீட்டு அலுவலர் 13.05.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர் (தற்போது வாடிப்பட்டி வட்ட வழங்கல் அலுவலர்) திரு.ரா.முருகன் என்பவரின் 12.05.2026 தேதியிட்ட எழுத்துமூலமான விளக்கத்தை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

3. முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் 12.05.2026 தேதியிட்ட தனது எழுத்துமூலமான விளக்கத்தில், மேல்முறையிட்டளார் 17 இனங்களில் தகவலை கோரி 25.09.2023 அன்று மனு செய்ததற்கு, 13.09.2024 அன்று தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும், உசிலம்பட்டி வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் நடைபெற்ற மக்கள் குறை மக்கள் தொடர்பு முகாம்கள், அரசின் சிறப்புத் திட்டமான மக்களுடன் முதல்வர் தொடர்பான பணிகள், அத்தியாவசியமான பணிகளளான பாராளுமன்ற தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், மேலும் வருவாய்த் துறையில் முக்கிய பணியான வருவாய் தீர்வாய பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததாகவும், 50-க்கும் மேற்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு நிலுவையிலிருந்ததால் மேல்முறையீட்டாளருக்கு 30 நாட்களுக்குள் தகவல் வழங்க இயலவில்லை என்றும், மேற்படி காரணங்களால் உரிய நாட்களுக்குள் வழங்க இயலவில்லை என்றும், இவ்வாறான தவறுகள் இனி வருங்காலங்களில் நிகழாவண்ணம் உரிய காலங்களில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தெரிவித்துள்ளதை ஏற்று, அவர் மீதான நடவடிக்கையை இவ்வாணையம் இத்துடன் கைவிடுகிறது. மேலும், இனி வருங்காலங்களில் மேல்முறையீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்களுக்கு குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தகவல் வழங்க வேண்டுமென்றும், தவறும்பட்சத்தில் தகவல் பெறும்

உரிமைச் சட்டப்பிரிவுகளின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.

4. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு 13 மாத காலதாமதமாக தகவல் வழங்கியுள்ளதால், மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்காக சட்டப்பிரிவு 19(8)(b)-ன்கீழ் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பான உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகம் வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை **30.06.2026-க்குள் பதிவஞ்சலில்** அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுகிறது. மேலும், இவ்வழக்கில் தகவல் வழங்குவதை பொறுத்தமட்டில், இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து 10.03.2026 அன்று உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில், இவ்வழக்கில் மேலும் விசாரணை மேற்கொள்ள ஏதுமில்லை என்று தீர்மானித்து, இவ்வழக்கினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 1512/விசாரணை/E/2024**

பெறுநர்
மேல்முறையீட்டு அலுவலர்/வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி,
மதுரை மாவட்டம்-625 532.

முன்னாள் பொதுத் தகவல் அலுவலர்/தலைமையிடத்து துணை வட்டாட்சியர்(05.09.2023 தேதியில்),
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்
(உசிலம்பட்டி வட்டாட்சியர் மூலமாக)

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்-625 532.

திரு.K.பாண்டி
38 நேரு தெரு, களத்துப்பொட்டல்,
தத்தனேரி, மதுரை-625 018.

Copy to: File

RJ/PS 1.6